பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (01.03.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில் தொடக்கக் கல்வி இயக்ககத்தில் காலியாக உள்ள குறைவுப் பணியிடங்களுக்காக (Shortfall vacancies) ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த 11 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர். பூ.ஆ.நரேஷ், அலுவலர்கள் மற்றும் புதிதாக பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மனிதநேயம் – 24 சான்றோர் போற்றும் மாண்பாளர்! தமிழ் நிலம் காக்கும் படைவீரர் 1.3.2026, ஞாயிற்றுக்கிழமை, சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இக்கருத்தரங்கில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மக்கள் நீதி மய்ய தலைவர் கமல்ஹாசன், சொல்வேந்தர் சுகி.சிவம் ஆகியோர் உரையாற்றினார்கள். கருத்தரங்கில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, சொ.வேலு, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பரிதி இளம் சுருதி. பி.எம்.யாழினி, வி.விஜயகுமார், ஆர்.பாபு மற்றும் கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமெரிக்கா, இஸ்ரேல் – ஈரான் இடையே போர் பதற்றம்

வளைகுடா தமிழர்களின் பாதுகாப்புக்கு உடனடி நடவடிக்கை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, மார்ச். 2-

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் பதற்றத்தினால் வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் - இடையே தற்போது ஏற்பட் டுள்ள போர் காரணமாக ஈரான் மற் றும் அதனை சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள் ளிட்ட வளைகுடா நாடுகளில் பதற்ற மான சூழ்நிலை நிலவுகிறது. இதன் காரணமாக அங்கு உள்ள இந்தியர்க ளின் பாதுகாப்பை கருதி, தேவை யற்ற பயணங்களை தவிர்க்கவும், முடிந்தவரை வீட்டிலேயே பாதுகாப் பாக இருக்கவும், இந்திய தூதரகம் வெளியிடும் அறிவுறுத்தலின்படி செயல்படவும் இந்திய அரசு அறிவு றுத்தியுள்ளது.

இந்த நிலையில், நான், தமிழ்நாடு முதலமைச்சராக, வளைகுடா நாடுக ளில் வசித்து வரும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். அங்குள்ள தமிழர் களின் நிலைமையை உடனுக்குடன் அறிந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கு வதற்காக, தமிழ்நாடு அரசின் அயல கத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ் வுத்துறைக்குஉரியஅறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் புது டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல் லத்திலும் கட்டுப்பாட்டு அறை அமைக் கப்பட்டு, நிலைமை கண்காணிக்கப் பட்டு வருகிறது

தமிழ்நாடு அரசு, அங்குள்ள தமி ழர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, நிலைமையை கண்கா ணித்து வருகிறது. மேலும் அவர்க ளுக்கு தேவையான அனைத்து உத விகளையும் வழங்க தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.

போர் பதற்றம் காரணமாக வளை குடா நாடுகளில் உள்ள தமிழர்க ளுக்கு ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், அவர்கள் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் 24/7 கட்டணமில்லா உதவி எண் களை அல்லது புது டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் கட்டுப்பாட்டு அறை யினை தொடர்புகொள்ளலாம்.

மேலும், தங்கள் பகுதிகளில் உள்ள இந்திய தூதரகம் வெளியிடும் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின் பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு கேட் டுக்கொள்கிறேன்.

புது தில்லி கட்டுப்பாட்டு அறையின் உதவி எண்கள்

01124193300 (Land line)

92895 16712 (Mobile Number with Whatsapp)

அயலகத் தமிழர் நலத்துறையின் உதவி எண்கள்:

இந்தியாவிற்குள் - 1800 309 3793

வெளிநாடு - +91 80 6900 9900 (Missed Call)

தொடர்புக்கு - +91 80 6900 9901

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவாகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வாட்ஸ்அப்பில் வலம் வரும் செய்தி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால்

'திராவிட மாடல்' ஆட்சியில் தொழில் துறையில் சாதிக்கும் பெண்கள்!

'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' பரப்புரை!

சென்னை, மார்ச் 2-

கழக மகளிரணியினர் முன்னெடுத்து வரும் வெல் லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடான பரப்புரையானது மக ளிரிடையே பெருத்த வர வேற்ப்பை பெற்று வருகிறது.

வீடு வீடாக சென்று பெண் களை சந்திக்கும் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள் கழகத்தின் சாதனை திட்டங் களையும் அதனால் பெண் கள் அடைந்து வரும் முன் னேற்றத்தையும் எடுத்துக் கூறி ஆதரவு திரட்டி வருகின் றனர்.

இன்றைய பரப்புரையின் போது முதலமைச்சரின் முயற்சியால் இந்திய அளவில் வேலைக்கு செல்லும் பெண்க ளில் சுமார் 43% பெண்கள் தமிழ்நாட்டு பெண்களாக உள்ளனர். இந்தியாவிலேயே முதலிடத்தில் தமிழ்நாடு உள் ளது. இது பெண்களின் பொரு ளாதார சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் மிக முக் கிய குறியீடு ஆகும்.

மேலும் ஸ்டார்ட் அப் தொழில் நிறுவனங்கள் மின் னல் வேகத்தில் உயர்ந்துள் ளன. கடந்த 2018 இல் கடைசி இடத்தில் இருந்த நமது தமிழ் நாடு 2022 லேயே முதலி டத்தை எட்டிப் பிடித்தது. இதில் 50% மான ஸ்டார்ட் அப் கள் பெண்களால் நடத்தப்படு பவை. பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு என்பது விளக்கப்பட்டது.

அதேபோல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 1.34 லட்சம் கோடி கடன் உத விசெய்யப்பட்டுள்ளது. சுமார் 2118 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சுய உத விக் குழுவினருக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக் கப்பட்டுள்ளன. இதன் காரண மாக லட்சக்கணக்கான பெண் கள் சுய தொழில் தொடங்கி சாதித்து வருகின்றனர் என்ற தகவல் எல்லாம் விளக்கமாக மக்கள் முன் எடுத்து வைத்து பரப்புரை செய்தனர் ஸ்டாலி னின் மகளிர் படையினர்.

பொதுமக்களும் திராவிட மாடல் அரசின் நலத்திட்டங் கள் தங்களின் வாழ்வை எப் படி உயர்த்தி வருகிறது என உணர்ச்சி பொங்க கூறினர்.

இது வெறும் பரப்புரை யாக மட்டுமில்லாமல் மகளிர் மனசு விட்டு தங்களின் மகிழ்ச் சியை பகிர்ந்து கொள்ளும் கலந்துரையாடல் நிகழ்வாகவே பெரும்பாலும் நடைபெற்றது.

தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழாவையொட்டி தாம்பரம் பேருந்து நிலையத்தில் அமைத்துள்ள டாக்டர் அம்பேத்கார் சிலை அருகில் 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் ஏற்பாட்டில் 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொது மக்களுக்கு உணவு வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி,ரமணி, ஆதிமுலம், பி.ஜோதிகுமார், செ.சுரேஷ், பெரியநாயகம், பகுதி துணை செயலாளர் ஜா ரவிகுமார்.கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஆர். செல்வகுமார், எம்.வினோத், சஞ்சிவி, வை.தங்கராஜ், சித்திரம்வாசுதேவன், வீ.கார்த்திக், எஸ். கார்த்திக், குட்டி தினேஷ், குணசேகர ராஜா, டி.ஆர்.முரளி, க.மு.சூர்யா, லோகேஷ், சதீஷ், குருமணி, இ.நவீன்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ரூ.249 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நிதிநுட்ப கோபுர கட்டிடத்தை திறந்து வைக்க இன்று நந்தம்பாக்கத்திற்கு வருகை தரும்

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், மார்ச்.2-

ரூ.249 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நிதிநுட்ப கோபுர கட்டிடத்தை திறந்து வைக்க இன்று மார்ச் 2-ஆம் தேதி காலை நந்தம்பாக்கத் திற்கு வருகை தரும் தமிழ் நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்க ளுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் ஆயி ரக்கணக்கில் அணி திரண்டு வந்து,நந்தம்பாக்கம் வர்த்தக மையம் அருகில் காலை 9.30 மணியளவில் மாபெரும் வர வேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கை:-

ஆலந்தூர் தொகுதி, நந்தம் பாக்கத்தில் ரூ.249 கோடி மதிப்பில் கட்டப்பட்ட நிதி நுட்ப கோபுர கட்டிடம் கட் டப்பட்டுள்ளது. இன்று மார்ச் 2-ஆம் தேதி காலை 10.00 மணியளவில் இப்புதிய கட்டிட திறப்பு விழா நந்தம் பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெ றவுள்ளது.

முதல் அமைச்சர் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் நேரில் வருகை தந்து இப்பு திய கட்டிடத்தை திறந்து வைக்கிறார்.

இம்மாபெரும் திறப்பு விழாவில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிர னைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சி புரம் வடக்கு மாவட்ட கழ கத்தின் சார்பில், இன்று 2.3.2026 காலை 9.30 மணிய ளவில் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் அருகில் மேளதாளம் - பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வர வேற்பு அளிக்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சி புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - த லை மை செ ய ற் கு ழு - பொதுக்குழு உறுப்பினர் கள், கழக அணிகளின் நிர்வா கிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இருவண்ண கொடியை யேந்தி 2-ஆம் தேதி காலை 9.30 மணிக்கெல்லாம் நந்தம் பாக்கம் வர்த்தக மையம் அரு கில் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங் கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத் தினர் அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றேன்.

இம்மாபெரும் வரவேற் பில் பங்கேற்பது "நமது கடமை - நமது உரிமை" என்ற அந்த லட்சிய உணர் வோடு கழகத்தினர் அனைவ ரும் அலைகடலென ஆர்ப்ப ரித்து வாரீர்! வாரீர்!! என்று இருகரம் கூப்பி அழைக்கி றேன்.

இவ்வாறு அவர் அறிக் கையில் கூறியுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை!

எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவிக்கிறார்! மேயர் பிரியா ராஜன் - தயாநிதி மாறன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, மார்ச். 02

சென்னை கிழக்கு மாவட் டம், மக்கள் முதல்வரின் மனி தநேய விழா 2026 மனிதநேய 27, தமிழரின் வாழ்வில் ஒளி பிறந்தது! சரித்திரம் தொடர நிலம் மலர்ந்தது! எனும் தலைப் பில் நாளை (03.03.2026 செவ் வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில், எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. வினோத் தலைமை வகிக்கி றார்.

மாவட்டக் கழகச் செயலா ளர், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பகுதிக் கழகச் செயலா ளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், கோ.ஏகப்பன், கே.எஸ். எம்.நாதன், புனிதவதி எத்திரா சன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ.மணி, புரசை ஜி.தாமோத ரன், வே.உமாகாந்த், க.நந்தீஸ் வரன், அ.நிர்மலா தேவி, எல். சுந்தர் ராஜன், கே.கோகுல் ஆகியோர் முன்னிலை வகிக் கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெக தீஷ், எஸ்.தனசேகர், ஜி. ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, த.ஜெயக்குமார், பா. பிரபாகரன், இ.பி.கார்த்திக், என்.ஜெ.மதன்குமார், ஆ. அஜித்குமார் (எ) ஜெபா, ஏ. ஆர்.யாசர் அரபாத், பி.டெல்லி கணேஷ், சே.பாலாஜி, ரா. கார்த்திக், பா.சங்கர், ஐ.சூரியா, அ.அவினேஷ், கோ.சந்தோஷ் குமார், மு.முகமது பிலால், லோ.சுகுமாரன், ஜெ.சிலம்பரசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மார்ச் 1 அன்று பிறந்த குழந் தைகளுக்கு தங்க மோதிரத் தினை கழக அமைப்புச் செய லாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந் தாமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்தி ரன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிர சன்னா, மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், ப.மீ. யாழினி, பரிதி இளம் சுருதி எம்.சி. மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர் கள் டால்பின் எஸ்.ஹரி, இ. மொய்தீன் ஆகியோர் நன்றி யுரை ஆற்றுகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தாளை யொட்டி, 100வது (அ), வட்ட கிளைக் கழகத்தில் கழக கொடியேற்றி இளிப்பு வழங்கப்பட்டது, பின்பு சங்கர நேத்ராலயா மருத்துவமனையுடன் இணைந்து, பொதுமக்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம், நடைபெற்றது. சுமார் 123 பயனாளிகளில் 63 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்பட உள்ளது. பின்பு மதியம் 12.30 மணியளவில் சீல்ட் ஆப் சர்வீஸ் பாலவினார் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., அண்ணாநகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாநில் தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 100வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி வசந்தி பரமசிவம் எம்.சி. மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2), BYO, BDA, BWO BLC மற்றும், கழக முன்னோடிகள்அனைவரும் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதி, 86 வது வட்டம், ஐ.சி.எப்.காலனியில் கழகத் தலைவர் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு 86 வட்டக் கழக துணைச் செயலாளர் சி.வினோத்குமார் ஏற்பாட்டில் கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவினை தலைமை செயற்குழு உறுப்பினரும், அம்பத்தூர் மண்டலக் குழுத் தலைவருமான வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்வில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், வட்டக் கழக செயலாளர் எம்.கமல் எம்.சி, ர.சந்தானகிருஷ்ணன், ஞானசேகர், சங்கர், மைக்கேல் ஜெபராஜ், சுரேஷ்பாபு,முகேஷ், பிரதாப், சரவணன், வி.பி.ரவிச்சந்திரன், தட்சிணாமூர்த்தி, வேதகிரி, பூபதி, வி.பி.ரவிச்சந்திரன், சௌந்தர்ராஜன், ரவி, சிவானந்தம், இளங்கோ, பிரபாவதி, ராணி, மஞ்சுளா சரவணன், விமலா, சேவுகப் பெருமாள், சரவணன், அன்பு, நரேந்தர், வினோத் கண்ணன், தினேஷ், சிவராமன் மற்றும் பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள் பொதுமக்கள் என பெருந்திரளாக கலந்து கொண்டனர்.